# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,980 — 1918 ம் ஹு கார்த்திகைமீ 22 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின்பிரகாரம் றயில்வேயுக்கு தேவையான எல்லும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 16,704. குதிச்சி—ருகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோபிவத்த .. | நாலுகொட்டில்களும், ஒரு கிடுகுகட்டிடமும், ஒரு ஆள்காட்டி மரமுளள மட்டப்படுத்தப்பட்ட நிலம் | மெஸ்சேஸ் புறூடன்பேக் அன்கோ.. | 5 | 3 | 36·3 |
| 2 | ஷை .. | உயர்ந்த நிலமும் சேனையும் .. | ஷை .. .. | 3 | 0 | 32·2 |
| 3 | ஷை .. | இரண்டு தென்னையும், ஒரு பிலாவும், ஒரு ஓட்டு கட்டிடமும் ஒரு ஓட்டு கக்கூசுமுள்ளதோட்டம் | ஷை .. .. | 0 | 0 | 25 |
| 4 | ஷை .. | ஒரு கிணருறும், சீமந்து கல்தூணுமுள்ள தோட்டம் | ஷை .. .. | 0 | 0 | 18·6 |
| 5 | டெல்ககரும்புற | நெல்வயல் .. .. | ஷை .. .. | 0 | 1 | 15·5 |
| 6 | டெல்ககவத்த .. | 7 தென்னமரங்களுள்ளதோட்டம் .. | ஷை .. .. | 0 | 0 | 28·4 |
| 7 | ககற்றககவத்த .. | 20 தென்னைமரங்களும், 78, தென்னங்கண்டுகளும், மற்றும் மரங்களும், ஒரு கிடுகு கட்டிடமும் ஒரு கிணறுமுள்ள தோட்டம் | ஷை யும் சோன் எவ். பெரீராவும், எற்றிகே சேமிஸ் சில்வாவும் | 0 | 3 | 38·5 |
| 8 | டெல்ககரும்புற | நெல்வயல் .. .. | மெஸ்சேஸ் புறூடன்பேக் அன்கோ.. | 0 | 0 | 3·2 |
| 9 | ஷை .. | ஷை .. .. | ஷை என். எம். யோடி பஸ்தியானும் சைமொன் பெர்னன்டோவாலும் உருத்தாடப்பட்டதும் | 1 | 2 | 8·2 |
| 10 | ஷை .. | ஷை .. .. | மெஸ்சேஸ் புறூடன்பேக் அன்கோ.. | 0 | 0 | 0·5 |
| 11 | ககற்றககவத்த .. | தென்னந்தோட்டம் .. .. | ஷை யும் சோன் எவ். பெரேருவும் எற்றீகே சேமிஸ் சில்வாவும் | 0 | 0 | 3·4 |
| 12 | கோபிவத்த .. | தோட்டமும் மட்டபடுத்தப்பட்ட நிலமும் | மெஸ்சேஸ் புறூடன்பேக் அன்கோ .. | 0 | 0 | 5·3 |

எடுத்துக்கோள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம்பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஹு டிசம்பர்மாசம் 19 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கசேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுகொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1918 ம் ஹு நவம்பர்மீ 19 ந் உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசன்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பசியாலையில் ஒரு பெண்பாடசாலை கட்டுகிற என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடம் இல. 16,845. குறிச்சி—பசியாலை.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கஹட்டகஹவத்தகும்புர .. | நெல்வயல் .. | பி. டொன் சோன் பவுலிஸ் றனசிங்க அப்புகாமி .. | 0 0 23·6 |
| 2 | கஹட்டகஹவத்த .. | 72 தென்னைமரங்களுள்ள தோட்டம் .. | ஷை .. | 1 3 13·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம்நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ௵ டிசம்பர்௴ 19 ந் தேதியிலன்று 12 மணிக்கு இந்தக்கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1918 ம் ௵ நவம்பர்௴ 19 ந் உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ரெபுவானை சந்தையை திருத்துகிறதற்கும் பிற்கால் சந்தை பெரிப்புப்புகளுக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 16,638. குறிச்சி—ரெபுவானை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 3 | ஆச்சாரியவத்த .. | கொஞ்சநாள் பாவிப்புக்காக உள்ள கட்டடத்தின் பகுதியும் தென்ன மரங்களுமுள்ள தோட்டம் | எம். டி. பி. அபையரட்னவும் மற்றவர்களும் .. .. | 0 0 3·1 |
| 4 | அம்பகொடஒவிதவத்த | தென்னை மற்றவையுள்ளதோட்டம் | எச். டி. இன்சோகாமினேயும், டபிள்யு. சுவானிஸ்பெர்னண்டோவும் .. | 0 2 30·69 |
| 5 | கொடயுடவத்த .. | ஷை .. | ஏச். டி. இஸ்சோகாமினே .. | 0 1 13·81 |
| 6 | கொடயுடவத்தகற்றிய | நெல்வயலின் பகுதியும் உயர்ந்த புட்டியின் சார்வும் .. | ரெபுவானையிலிருக்கும் புத்தகோயிலின் பார்வைகாறர் .. .. | 0 0 1·50 |
| 7 | ஷை .. | சூடடிக்கும் நிலம் .. | ஷை .. | 0 0 8·3 |
| 8 | பகலகும்புற .. | நெல்வயல் .. | ஷை .. .. | 0 0 8 |
| 9 | பகலகும்புறகெல .. | சேனைபத்தையும் சேற்றுநிலமுமுள்ளது .. | ஷை யும், எச். டி. இஸ்சோகாமினேயும் .. | 0 0 7·61 |
| 10 | கொடயுடவத்த .. | சேனை (வெறுநிலம்) .. | ஏச். டி. இஸ்சோகாமினே .. | 0 0 1·31 |
| 11 | மடனகேவத்த .. | ஷை .. | எம். டி. பீ. அபையரட்னவும், ஏச். டி. இஸ்சோகாமினேயும் கே. அலினோகாமியும் ஆர். ஞுபோஙயிடேயும் .. | 0 0 3·75 |
| 12 | பினகொலகும்புற .. | நெல்வயல் .. | ஏ. வீ. கே. மேயப்பாசெட்டி .. | 0 0 18·79 |
| 13 | மடனேகேவத்த .. | தென்னையும் றப்பருமுள்ள தோட்டம் | எம். டி. பி. அபயறட்னவும் எச். டி. இஸ்சோகாமினேயும் கே. அலினோகாமியும் ஆர். ஞுபோஙயிடேயும் .. | 0 0 25·20 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காககளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைககொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடையகாரியகாரர் மூலமாய் 1918 ம் ௵ டிசம்பர்மாசம் 16 ந் தேதியிலன்று 10 மணிகசு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால்] அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1918 ம் ௵ நவம்பர்௴ 13 ந் உ.

சி. வி. பிறேயின்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கெவுல்காமப் பள்ளிக்கூடப்பகுதிக்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டுகிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 6,842. குறிச்சி—கெவுல்காமம்.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசால்ம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | இராசுருபிற்றியேகேனு .. | சேனையும் பள்ளிக்கூடமும் .. | அத்தனகெதர உக்குபண்டாவும் வேறுமாட்களும் .. | 1 0 33·9 |

எடுத்துக் கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞூ டிசெம்பர்மாசம் 19 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1918 ம் ஞூ நவம்பர்மீ 15 ந் உ.

சி. எஸ். வோன்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தொளஸ்பாகேயில் நோயாளிகளைப் போய்ப் பார்க்கும் உதவி வைத்தியருக்கு வீடுகட்டுகிறதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 6,874. குறிச்சி—மியாங்கொல்லை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | மியாங்கொல்லைத் தோட்டம் | மானாப்புல்லம் காடும், இப்போ துப்பரவுபண்ணியிருக்கிறது | பவுஸ்ரெட் பிரதேர்ஸ் கம்பனியார் | 0 1 30·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசசட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞூ டிசம்பர்மாசம் 19 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக்கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1918 ம் ஞூ நவம்பர்மீ 22 ந் உ.

சி. எஸ். வோன்,
அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,058, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டெனை உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஞூ (நொவம்பர்) கார்த்திகைமீ 22 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்து கொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாகல் டிஸ்திறிக் தெவமெடி காற்பத்தைச்சேர்ந்த தெவமெத்தே கோறளையில் பியன்கல்ல என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 14 பேர்ச் விசாலமுடையதும் 4,475 ம் பிரதமபடத்தில் K 107 ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் காற்பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம் என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. இதற்கெல்லைகளாவன: வடக்கு-கிராமங்களிலிருந்து பியன்கல்லவுக்குப் போகும் காற்பாதை; கிழக்கு-போகாமன்ன ஆருச்சி உரித்தாடும் கெற்றிகெதறவெல; தெற்கு-பி. ஏ. பேற்றுன்டோ அவர்களு மின்னுமொருத்தரும் உரித்தாடும் ஈமடகாயாயேவத்த, முடிக்குரிய ஈமடகாயாயேவத்த; மேற்கு-றத்மலக் கிராம எல்லை.

*இங்கிலீசின் மூன்றாம் பாகம் 2175 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 119—1918.]

---

[அறிவித்தல் இல. 7,059, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டெனை உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஞூ (நொவம்பர்) கார்த்திகைமீ 22 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம் 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைகொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிகுரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாகல் டிஸ்திறிக் தெவமெடி காற்பத்தைச்சேர்ந்த ஹெத்தலானே கோறளையில் தொலோகொமுன என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 1 றூட் 4·75 பேட்சு விசாலமுடையதும் 1,723 ம் பிரதமபடத்தில் 45A ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் கோனகாமுலயேன (றோட்டுக்கு சேமிக்கப்பட்ட நிலம்) என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. இதற்கெல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய கோன்காமுலகேன (அரசாட்சியார் சோதினைக்கு பயிர்செய்யும் தோட்டம்), முடிக்குரிய தொலோகொமுனேவெவ (குளம்); கிழக்கு-கன்சபாவா றோட்டு; தெற்கு-வாறியபொலவிலிருந்து சிலாவத்துக்குப் போகும் றோட்டு; மேற்கு-ககடகறுனறான்கே சிமொன்பெறேறாவும் மின்னுமொருத்தரும் உரித்தாடும் (றோடடுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்).

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 2176 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 120—1918.]

---

[அறிவித்தல் இல. 7,060, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (நொவம்பர்) கார்த்திகை௴ 22 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாகல் டிஸ்திறிக் கட்டுகம்பொலகாற்பத்தைச்சேர்ந்த மெதபத்துகோறளையில் கம்புறுகொட என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

I.—பிரதம படம் 298.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 45A | றோட்டுசேமிப்பு | 1 | 1 | 12 |
| 45B | ஷை | 0 | 1 | 31 |
| 45C | ஷை | 0 | 0 | 38 |
| | | 2 | 0 | 1 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட வலகும்புறவத்த (277,108 ம் உ. ப. ல் காணும் காணி) தலகெற்றிமுல்லக் கிராமஎல்லை; கிழக்கு-கன்கானியமுல விலிருந்து உடுகமவுக்குப்போகும் றோட்டு (வலகும்புறமுலக் கிராமஎல்லை); தெற்கு-கன்கானியமுல விலிருந்து உடுகமவுக்குப்போகும் றோடடு (இரியகொல்லக் கிராமஎல்லை) கன்கானியமுலவிலிருந்து உடுகமவுக்குப்போகும் றோடடு; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட டவத்தகாவத்த றோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) முடியால் விற்கப்பட்ட வலகும்புறவத்த (277,108 ம் உ. ப. ல் காணும் காணி).

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 2176 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாகல் வி. உ. 121—1918.]

---

[அறிவித்தல் இல. 7,061, அநுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (நொவம்பர்) கார்த்திகை௴ 22 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவறகம்பலாத்த கடவத்கோறளையைச்சேர்ந்த அலுத்கடவத்துளானையில் டியுல்கஸ்கட என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 8 பேட்சு விசாலமுடையதும் 617 ம் பிரதம படத்தில் 16½ ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் காற்பாதை என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டுவருவதுமான காணித்துண்டு. இதற்கெல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட டியுல்கஸ்கடலந்துகெலே; கிழக்கு-மணியர்குளத்திலிருந்து எத்தகடவுக்குப் போகும் கரத்தைப்பாதை; தெற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட டியுல்கஸ்கடலந்துகெலே; மேற்கு-புகுடியுல்வெவக் கிராம எல்லை.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 2177 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அநுராசபுரம் வி. உ. 44—1918.]

[அறிவித்தல் இல. 7,062, அநுராசபுரம்.]

இதன்பின் சொலலப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1918 ம் ஸ்ரீ (நொவம்பர்) கார்த்திகைமீ 22 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம் 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்த விலாச்சியகோறளையைச்சேர்ந்த மோறகலகடவத்துலானையில் லிந்தவெவ என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 3 றூட் 4 பேர்ச்சு விசாலமுடையதும் 697 ம் பிரதமபடத்தில் 45 ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் பாலுகாவெலகேன என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. இதற் கெல்லைகளாவன: வடக்கு-உக்குருல வெல்விதானையும் மறுபேரும் உரித்தாடும் புருனவெல, கிராமத்தாருக்குரிய நககாலந்த; கிழக்கு-வான்எல; தெற்கு-வான்எல, 234,746 உ. ப. ல் காணும் காணி; மேற்கு-234,746 ம் உ. ப. ல் காணும் காணி.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 2177 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அநுராசபுரம் வி. உ. 45—1918.]

---

## காணி அளவையைப்பற்றிய அறிவித்தல்.

முடிக்குரிய பூமியை விலைக்குவாங்க அல்லது குத்தகைக்கெடுப்பதற்கான கேள்வி அளவைகள் இனிமேல் கீழ்மாகாணத்தின் பகுதிகளில் முறைமுறையாக நடத்தப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2\. இம்மாகாணம் பிரிக்கப்பட்டிருப்பதாவது :—

1 ம் பகுதி—இது மட்டுக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கும் கோறளை, ஏறாவூர் உறுகாமம், விந்தனை மண்முனை (வடக்கும் தெற்கும்) எருவில் போரதீவுப்பற்றுகளை அடக்கும்.

2 ம் பகுதி—இது திரிகோணமலை டிஸ்திறிக் முழுவதையும் அடக்கும்.

3 ம் பகுதி—இது மட்டுக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கும் நாடுகாடு, சம்மாந்துறை, கரைவாகு, நிந்தவூர் அக்கரை, பாணமைப்பற்றுகளை அடக்கும்.

3\. 1 ம் பகுதி 1918 ம் ஆண்டு இங்கிலீசுக்கு மார்கழிமாதம் 15 ந் திகதியிலன்று அளவைக்காக மூடப்படும். இந்தப் பகுதிக்குட்பட்ட பூமிகளின் கேள்விப்பத்திரங்கள் ஒன்றும் அத்தேதியின்பின் அளவைத்தலைவருக்கு அனுப்பப்படமாட்டாது. ஆகிலும் இவ்வேற்பாடு இப்பகுதிக்குள்ளிருக்கும் பூமிகளைநோக்கி அவைகளின் விற்பனவுக்கு அல்லது குத்தகையில் கொடுப்பதற்கு ஏதாகுதல் தடையிருக்குதோ வென்பதை நிச்சயித் தறிதற்பொருட்டு கேள்விப்பத்திரம் எனக்கனுப்பிப் பதிவுசெய்விப்பதைத் தடைசெய்யமாட்டாது.

4\. கேள்விப்பூமி அளவைநடத்தப்படாமல் அதன்பின் கட்டளையிடப்படும் பகுதி 2 ம் இலக்கப் பகுதியும் அதன்பின் 3 ம் இலக்கப் பகுதியுமாம், இவ்விரண்டு பகுதிகளிலும் முடிக்குரிய பூமியை விலைக்குவாங்க அல்லது குத்தகைக் கெடுப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கூடியளவு சுறுக்கில் எனக்கு அனுப்பப்படல் வேண்டும்.

5\. 2 ம் இலக்கப்பகுதியை அளவைக்காக மூடப்படும் திகதி சுறுக்கில் பிரசித்தப்படுத்தப்படும். அது 1 ம் இலக்கப் பகுதியிலுள்ள அளவைகள் எல்லாம் முற்றுப்பெற்ற திகதியைக் குறிக்கும்.

சி. ஈ. த பின்றோ,
கீழ்மாகாண அரசாட்சி ஏசன்றுத்துரைக்காக.

1918 ம் ஆண்டு கார்த்திகை 14 ந் திகதி.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

இத்தாற் சகலருமறியவும் 8,000 அந்தர் உப்பு கரையூரிலிருந்து மன்னாருக்கு ஏற்றிக்கொண்டுபோய்க் கொடுக்கவிரும்புபவர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரன் ஏற்றவேண்டிய உப்பில் 6,000 அந்தரை 1918 ம் ஸ்ரீ மார்கழிமாதம் நடுப்பகுதியிலும் மிகுதியை 1919 ம் ஸ்ரீ மாசிமாதத்திலும் ஏற்றிக் கொண்டுபோய் ஒப்புவிக்கவேண்டியவராவர்.

2\. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இணைப்பிரதிகளாக ஒட்டி முத்திரைவைத்து மேல்விலாச மிட்டிருக்கவேணும்.

(a) மூலப்பிரதியில் வடமாகாணம் கவுண்மேந்து ஏசென்றுவுக்கு மேல்விலாசம் எழுதுக.

(b) இணைப்பிரதியில் கொழும்பு அரசிறைவருமான காரியஸ்தருக்கு என்று மேல்விலாசம் எழுதுக.

3\. "உப்பு ஏற்றக் கேட்கும் கேள்விப்பத்திரமென்று" உறையில் இடதுபக்க மேல்மூலையில் எழுதவேண்டும். 1918 ம் ஸ்ரீ மார்கழிமாதம் 3 ந் தேதி செவ்வாய்க்கிழமை மத்தியானத்துக்குமுன் கவண்மேந்து ஏசன்றர் கந்தோரிலும் அரசிறைவருமான காரியஸ்தர் கந்தோரிலும் சேரவேண்டியது.

4\. கேள்விப்பத்திரம் அதற்கென்று அச்சடிக்கப்பட்ட கடதாசியில் எழுதவேணும். அக்கடதாசிகள் யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம். அப்படியான கடதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்களை ஏற்கப்படமாட்டாது. மாற்றங்களுக்கு கையொப்ப முதலெழுத்துகளிடப்படவேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரங்கள் பிழையென விலத்தப்படும்.

5\. கேள்விப்பத்திரம் கடதாசிகள் பெற விரும்புவோர் கச்சேரியில் ரூபா 50 கட்டிப் பற்றிச்சீட்டைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கவுண்மேந்து ஏசண்டினால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் அறிவிக்கப்பட்டுப் பத்துநாளைக்குள்ளாகப் போதிய பிணை கொடுக்கத் தவறினால், அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுத்தால் கட்டப்பட்ட காசு பறிமுதலாக்கப்படும். அப்படித் தவறியவர்களின் பெயர் கவுண்மேந்துக் கொந்திறாத்து கொடுக்கப்படாதென்று தள்ளப்பட்டவர்களுடைய பெயர் பதியப்படும் இடாப்பிலும் சேர்க்கப்படும். ஒப்பந்தம் நிறைவேற்றியவுடன் கட்டிய காசு முதலியவை திருப்பிக் கொடுக்கப்படும்.

6. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான மனுஷர் பிணைநிற்போமென்று சம்மதங்காட்டும் பத்திரமும் அணைத்திருக்கவேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்கவேணும்.

7. கேள்விப்பத்திரத்தில் ஒரு அந்தருக்கு ஏற்றுமதி கூலி எவ்வளவென்று குறிக்கவேண்டும். நூற்றுக்கு இரண்டு வீதத்துக்கு மேம்படாமல் சேதத்துக்குக் கழிவுவிடப்படும்.

8. ஒவ்வொரு ஒப்பந்தக்காரனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும். மற்றுங் காரியங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் அறிந்துகொள்ளலாம்.

9. மேற்சொல்லியவைகளுக்கேற்க எழுதப்படாத கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டாது.

10. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாவற்றையும் ஏற்க அல்லது நியாயஞ்சொல்லாது மறுக்க முழு உருத்தும் கவண்மேந்துக்கு உண்டு.

போ. சி. நீக்கிலாஸ் முதலியார்,
கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1918 ம் ௵ கார்த்திகைமீ 12 ந் ௳.

---

1919 ம் ௵ தைமாதம் 1 ந் தேதி தொடக்கம் ஆனி மாதம் 30 ந் தேதி வரைக்கும் நிலாவெளி.

(a) உப்புக் குதங்களிலிருந்தும்.
(b) உப்பள மேடைகளிலிருந்தும்.
(c) உப்புக்குத மேடைகளிலிருந்தும்.

1. திருக்கோணமலை பழைய உப்புக் குதங்களுக்கு அதாவது காட்டுப்பகுதித்தலம். பகிரங்கவேலைக் கட்டிட அடைப்பு, ரேகுத்தரை என்னும் இடங்களுள் அமைக்கப்பட்டுள்ள குதங்களுக்கும், (2) பிரங்கியடிக் குதங்களுககும் உப்பு ஏற்றிவந்து சேர்ப்பதற்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்கும்படி கேட்கப்படுகின்றது.

2. (a) வகையில் ஒப்பந்தக்காரர் உப்பை நிறுத்து ஏற்றுக்கொள்வர், (b) (c) வகைகளில் செய்கைக்காரர் உப்பை நிறுத்து ஒப்பந்தக்காரர் கொண்டுவரும் சாக்குகளில் நிறைத்துவிடுவர்.

3. உப்பு ஈரமாயிருந்தால் அந்தர் நிறை திருக்கோணமலை உதவி இராஜகாரியஸ்தரது கருத்துப்படி 113 இருத்தல் தொடக்கம் 166 றுத்தலாகக் கணக்கிடப்படும்.

4. ஐயாயிர அந்தருக்குக் குறைய ஏற்றுமதிசெய்யும்படி ஒருபோதும் ஒப்பந்தக்காரன் கேட்கப்படமாட்டார். உதவி இராஜகாரியஸ்தரது அறிவித்தல் ஒப்பந்தக்காரரது திருக்கோணமலை விலாசத்தில் கிடைத்த ஒரு கிழமையில் ஏற்றுமதி ஆரம்பித்தல் வேண்டும். ஒப்பந்தக்காரரது திருக்கோணமலை விலாசம் இவ்வொப்பந்தத்தின் எவ்வறிவித்தலும் கொடுக்க ஏற்க போதியதாகவிருக்கும்.

5. நிறுவை குதச்சேர்வை உட்பட அந்தர் ஒன்றுக்கு ஒப்பந்த விகிதம் இன்தென்று காட்டல்வேண்டும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் நாளாந்தம் (a) வகையில் 300 அந்தருக்குக் குறையாததும், (b) (c) வகைகளில் முறையே 250 அந்தருக்குக் குறையாததும் உப்பு ஏற்றுமதிசெய்தல்வேண்டும்.

7. ஒப்பந்த பத்திரத்தைக்கொண்ட உறையின் இடப்பக்க மேல்மூலையில் "உப்பு ஏற்றுமதிசெய்தற்கு ஒப்பந்தம்' என்று எழுதி அப்பத்திரத்தை 1918 ம் ௵ மார்கழிமாதம் 7 ந் திகதி சனிக்கிழமை மத்தியானம் திருக்கோணமலை உதவி இராஜகாரியஸ்தர் கந்தோரில் கிடைக்கத்தக்கதாய் அனுப்பல் வேண்டும். 1 (a), 1 (b), 1 (c), 2 (a), 2 (b), 2 (c) என்பவற்றினுக்கு வேறு வேறு விகிதங்கள் குறிக்கப்படல் வேண்டும்.

8. திருக்கோணமலைக் கச்சேரியில் கேட்டுப்பெறும் அச்சுப்பிரதிகளிலேயே ஒப்பந்தம் எழுதல்வேண்டும். அப்படி எழுதியனுப்பப்படாத ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

9. திருக்கோணமலைக் கச்சேரியில் ரூபா ஐம்பது (ரூபா 50) கட்டிய பற்றுச்சீட்டுக் காட்டி ஒப்பந்த அச்சுப்பிரதிகள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். யாதொரு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாய் உதவி இராஜகாரியஸ்தர் அல்லது அவரது தத்துவம்பெற்ற பிரதிகாரியஸ்தர் எழுதிய அறிவித்தல்கிடைத்த ஏழு நாளில் ஒப்பந்த உடன்படிக்கை நிறைவேற்றவுந் தகுந்த பிணை கொடுக்கவும் எவரும் தவறினால், மேற்சொல்லியபடி கட்டிய தொகையை இழந்துவிடுவதுமன்றி, அப்படித் தவறியவர் அரசாட்சி ஒப்பந்தங்கள் எவற்றினும் எக்காலத்தினும் சேராதபடி தவறியவர்தாம் அட்டவணையில் அவருடைய பெயர் எழுதப்படநேரிடும். ஒப்பந்தம் கையொப்பமிட்டபின் கட்டிய ரூபா 50 கொடுக்கப்படும்.

10. ஒப்பந்தப்படி ஏற்பாட்டை நிறைவேற்றற்குப் பிணைப்பட உடன்படும் இரண்டு தகுந்த ஆட்களது கையொப்பமும் விலாசமுமிட்ட கடிதம் ஒன்று ஒவ்வொரு ஒப்பந்த பத்திரத்தோடும் அணைக்கப்படல்வேண்டும்.

11. ஒப்பந்த ஏற்பாட்டை சரிவர நிறைவேற்றப் பிறப்பிக்கப்படும் சீட்டில் போதிய பிணைக்காரர் கையொப்பமிடல் வேண்டும். சீட்டின் தொகையும் வேறு பிற விபரங்களும் திருக்கோணமலைக் கச்சேரியில் கேட்டு அறியலாம்.

12. திருக்கோணமலை உதவி காரியஸ்தருக்கு ஒப்பந்த மூலப்பிரதி அனுப்பிய திகதியிலேயே கொழும்பு கௌரவ அரசிறை நிருவாகரவர்கட்கு இணைப்பிரதி தபால்மார்க்கமாயனுப்பபடல் வேண்டும்.

13. மேற்குறித்த நிபந்தனைகள் யாவும் யதார்த்தமாய் நிறைவுற்றாலன்றி ஒப்பந்தப்பத்திரங்கள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது.

14. யாதும் ஆட்சேபமின்றி ஒப்பந்த பத்திரங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் தள்ளிவிடும் உரித்தையும் ஒப்பந்தத்தில் ஓர் பகுதியை ஏற்கும் உரித்தையும் அரசாட்சியார் உடையர்.

டபிள்யு. கே. எச். கெம்பல்,
உதவி இராஜ காரியஸ்தர்.

திருக்கோணமலைக் கச்சேரி,
1918 ம் ௵ கார்த்திகைமீ 12 ந் தேதி.

---

## தொழிலுக்குப்படாதவரின் அறிவித்தல்.

இன்றையிலிருந்து மூன்றுமாதத்திற்பின் சீனுகோறளை மெதபத்துவ அலுத்கம விதியாவத்தையில் இருக்கும் பியான் விலகே தோன் எலாறிஸ் மாகிய நான் 1907 ம் ஆண்டில் 1 வது ஆடினன்ஸ் 8 வது பிரிவின்படி பதிவுகாரியகர்த்தர் அவர்களுக்கு என்னை சிலாவடிஸ்திறிக்கில் சிங்களப்பாஷையில் நொத்தாரிஸ் வேலைபார்க்க விடும்படி விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கின்றேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

பீ. தோன் எலாறிஸ்.

விதியவத்தை, அலுத்கம,
1918 ம் ௵ நவம்பர்மீ 2 ந் ௳.

இதனடுத்த மூன்று மாதத்தின் பின், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமங் கிழக்குப்பகுதி கோப்பாய் இறையிலுள்ள (தற்காலம் யாழ்ப்பாணம் சீதாரி) கந்தையா சோமசுந்தரம் ஆகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கீட்டளிச்சட்டத்தின் 8 ம் பிரிவின் பிரகாரம் பதிவுகாரியகர்த்தர் அவர்கட்கு என்னை யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கில் தமிழ்ப்பாஷையில் நொத்தாரிசு வேலைபார்க்க விடும்படி விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இங்ஙனம், க. சோமசுந்தரம்.

யாழ்ப்பாணம்,
1918 ம் ௵ ஐப்பசிமீ 21 ந் ௳.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.